"விடுதலை" சந்தா விகிதம்
[முன் பணமாக],
தனிப்பிரதி 1½ அணா
இந்தியா சந்தா விகிதம்
ரூ. காசு
1 மாதம் 2—15
3 மாதம் 6—25
6 மாதம் 12—00
12 மாதம் 24—00
வெளிநாடு
3 மாதம் 15—00
6 மாதம் 30—00

REGD. NO: M. 4789.
PHONE NO: 86977.
LEADING TAMIL DAILY.

தென்னாடுதிராவிடருக்கே

விடுதலை

'VIDUTHALAI'
ESTD: 1935.
திராவிடர் தமிழ்த் தினசரி

4 பக்கம் விலை 1 அணா
இலங்கையில் 10 சதம்

பெரியார் பொன்மொழி

"மூடநம்பிக்கைக் காரர்களும் கடவுளின் பெயரைச் சொல்லி மதம் சாஸ்திர புராணங்களில் கூறட்டும் பித்தலாட்டங்களை யேதக் பிழைப்புக்குத்துணையா க்கொண்டுள்ளவர்கள், மூடநம் பிக்கையல்வாழலாம் என்றதுணி வின் பேரில் மூடநம்பிக்கையை நிலைநாட்ட நாஸ்திகம் என்ற ஆயுதத்தைக் கையாளுகின்றனர்

டீசர் 19 | சென்னை: ஏவினம்பி ஞ மாசி மீ 19 உ (2—3—58) ஞாயிறு | வெளிநா: ஏவினம்பி ஞ மாசி மீ 20 உ (3—3—58) திங்கள் | இதழ் 68

ரூபாய் 15 லட்சம் உபரிகாட்டும் தமிழ்நாடு பட்ஜெட்!

ல்லா பெருநிலக்காரருக்கும் விவசாய வருமான வரி!

சினிமாக்களுக்கு தமாஷா வரி உயர்வு

டீசல் எண்ணெய் வரி

காலனுக்கு 35 காசாக உயர்வு

என். ஜி. ஒ.க்களின் பிள்ளைகளுக்கு எஸ். எஸ். எல். சி. வரை இலவசக்கல்வி

நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் விளக்கம்

சென்னை மார்ச் 2...

நேற்று அசெம்பிளியில் நிதி அமைச்சர் திரு சி சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்நாட்டின் ரூ 15 லட்சம் உபரிவருமானம் கிடைக்கத்தக்க பட்ஜெட் (வரவு செலவு திட்டம்) தாக்கல் செய்து தமிழில் பேசி விளக்கினார். பட்ஜெட் தமிழிலும் இங்கிலீஷிலும் அச்சடித்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது

நேற்றைய நடவடிக்கைகளை கேள்வி நேரம் வரை ரஷ்ய பார்லி மெண்டரித் தூதுக்குழுவினரும் காலரியில் அமர்ந்து கவனித்தனர்

திரு காமராஜர் முன்பே வகுக்கப்பட்டபடி என் ஜி ஒ க்களின் குழந்தைகளுக்கு என் எஸ் எல் சி வகுப்புவரையிலும் சம்பளமில்லாமல் படிக்க வசதி செய்யப்பட்டுள்ளது

வரவுக்குமேல் செலவாகும் ரூ 105 லட்சம் தொகையை ஈடுசெய்ய புதியவரிகளின் மூலம் ரூ 120 லட்சம் ஈடுசெய்ய முதலாம் ரூ 15 லட்சம் உபரி காட்டப்பட்டிருக்கிறது பற்றாக்குறையை ஈடுசெய்யவே புதியவரி விசாரவ வருமானவரி விதிக்கப்படுவதுஎன்றாலும் சிலவரிகளை உயர்த்துவதாகவும் நிதி அமைச்சர் விளக்கம் தந்தார் இவரது உரைக்கு 45 நிமிஷநேரம் பிடித்தது முதலமைச்சர் காமராசரும் இரு அமைச்சர்களும் பெரும் பாலோரான உறுப்பினர்களும் வந்திருந்தனர்.

இந்த பட்ஜெட் பிரேரணைமீது காலை நிமிடமுமைமுதல் பகல் 1 மணிக்கு அசெம்பிளி ஒடி ரோட் கன்வரை தொடர்ந்து விவாதம் நடைபெறும்

வரி உயர்வுகள்

டீசல் எண்ணெய் வரி

பெட்ரோலைத் தவிர்த்து மற்ற எல்லா மோட்டார் எண்ணெய்கள் மீதும் [டீசல் ஆயில்உள்பட] காலன் ஒன்று 10 காசுகள் இருந்த வரி 35 காசுகளாக உயர்த்தப்படுகிறது

இதன்மூலம் ரூ 70 லட்சம் வரு மானம் கிடைக்கலாம்

தமாஷாக்கள்மீது வரி

குதிரைப் பந்தயம் சினிமாக்கள் தவிர்த்த இதர எல்லாப் பொழுது போக்குகளுக்கும் விதிக்கப்பட்ட தமாஷாவரிகளை பத்தாகப் பிரிங் சினிமா உட்பட எல்லா சினி மாக்களுக்கும் உயர்வு செய்யப்படுகிறது முதல் சட்டத்தில் 20 சத விதமாயிருப்பது 25 சதவிதமாகவும் இரண்டாவதுபட்டத்தில் 25 சதவிகிதமாயிருப்பது 33½ சத விதமாகவும் 33½ சதவிதமாக வுள்ளது 40 சதவிதிதமாகவும் உயர்த்தப்படுகிறது

இதனால் வரக்கூடிய சுமார் ரூ 30 லட்சம் வருமானத்தில் 90% ஊராட்சிகளுக்குக் கிடைக்கும் சென்னை நகரசபைக்கு ரூ 6 லட்சம் வரை கிடைக்கும்,

எல்லா நிலக்காரருக்கும் வருமான வரி

தற்போது போட்டச்சொத்துக்களுக்குக்கான வருமானவரி விதிக்கப்படுகிறது இனி எல்லா நிலச்சொத்துக்களுக்கும் வருமானவரி விதிக்கப்படும் அப்படி வருமானத்தைகணக்கிடுகையில் இரு தலைவிளில் வரும் வருமானத்தையும் சேர்த்துக் கணக்கிடப்படும் விவசாயப்பகுதி வருமானத்தைக் மட்டும் மேல் கட்டங்களுக்குள்ளே உயர்த்த விதிக்கப்படும் வரிவிதிக்கப் படும்.

சிறு நிலச்சொந்தக்காரர்களுக்கு உதவுதேசமதிப்பின்மேல் மொத்தமாக வரி செலுத்தும் சலுகை தந்து விவசான கணக்கு கள் வைக்கும் பொறுப்பினிருந்து விடுவிக்கப்படுவர் பெரிய நிலச் சொந்தக்காரர்கள் செலுத்தும் உபரி வரி ரத்து செய்யப்படும்,

இப்பொழுது தோட்டச்சொத்துக்கள் மீதுதான் வருமானவரி விதிக்கப்படுகிறது இனி ரூ 3.00 வரை விதிவிலக்களித்து மற்ற எல்லா நிலச்சொத்துக்கள் மீதும் இந்த முறைப்படி விவசாய வருமான வரி விதிக்கப்படும்.

இந்த வரி மூலம் எவ்வளவு வருவாய் கிடைக்குமென்று உடனே கணக்கிடுவது சாத்தியமல்ல ஆயினும் ரூ 70 லட்சம் வரலாம் என மதிப்பிடப்படுகிறது

விவசாய டிமான்ஸ்டிரேட்டர்களின் சம்பளமும் உயர்த்தப்படுகிறது அய்வேஸ் இலாக்காவில் பேக்குவரத்து இயக்நிரப்புமுதலாளர்க்குவரத்து இயக்நிரப்புமுதலாளர்க்கு சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் நிரந்தர ஊழியர்கள் ஆகுதியில் சேருவார்கள்.

விற்பனை வரி

விற்பனைவரி பற்றி டாக்டர் லோகநாதன் பெரிய்கள் பரிசீலனையில் உள்ளன விற்பனை வரி சட்ட திருத்த மசோதா விரைவில் வெளிவரும் அவர் தயாரிப்பார்கப் படி ரூ 10 ஆயிரம் முதல் ரூ 20 ஆயிரம் வரை வியாபாரம் செய்பவர்களை கணக்குக்காட்டும் பொறுப்பிலிருந்து விடுவித்து உத்தேச மதிப்பினமேல் மொத்தமாக வரி செலுத்த அனுமதிக்கப்படுவர் பல முனை விற்பனை வரியிலிருந்து பல பொருள்களை ஒரு முனை விற்பனை வரிக்குக்கொண்டுவரப்படும்

தமிழ்நாடு 1958-59 பட்ஜெட் சுருக்கம்

நிற்போதைய வரிகளின்படி வருமானம்	ரூ 63 40 கோடி
செலவு	63·75
பற்றாக்குறை	1·35
அதிகப்படி மத்திய உதவி	30
இறுதியாக மிஞ்சுவது	1·05
புதிய வரிகள் மற்றும் நல்களில் எதிர் பார்க்கும் வரவு	1·20
எதிர் பார்க்கும் உபரி	·15

எஸ். ஜி. ஒ. க்கள் எதிர்ப்பு நாள்

சென்னை, மார்ச் 2...

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த என் ஜி ஒ க்கள் மார்ச் 19ம் தேதி 'எதிர்ப்பு நாள்' கொண்டாடுவார்கள் என்று தெரிகிறது இவ்விபரத்தை தென்னாபிரிக்காவின் என் ஜி ஒ க்களின் பொதுச் செயலாளர் மேற்கிரவு விடுத்துள்ளசுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் 19ம் தேதியன்று இவர்கள் எதிர்ப்புச் சின்னம் அணிந்து கொள்வார்கள் அந்நாள் ஊர்களில் பொதுக்கூட்டங்கள் போட்டுதங் கள் கோரிக்கைகளை விளக்குவார்கள் அக்கூட்டத்திற்கு எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைக் குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

வால்மீகியின் உள்ளப்படி இராமாயணக் கருத்து

இராமாயணம் நடந்ததையாக இருக்கமுடியாது. இது சங்கராச் சாரியார்கள் முதல், பல அறிவாளி களும், ஆச்சாரியார்களும் ஒப்புக் கொண்ட கருத்தாகும்,

இரண்டாவதாக இராமன்கடவுளோ, கடவுள் அமசமுடையவனோ அல்ல என்பது "வால்மீகி" பாலேயே குறிப்பிடப்பட்டசேதியாகும்.

இந்த நிலையில் நாட்டில் இந்தக்கள் என்பவர்கள் இடையில் இராமாயணம் ஒரு புண்ணிய கதையாகவும், பகதி செலுத்தத் தக்க நற்பாத்திரங்களாகவும் மதிக்கப்பட்டு வருகிறது.

ஏன்? என்றால் பார்ப்பனர் பிரசாரத்தினாலேயும் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு ஆராய்ச்சி அறிவும் மான உணர்ச்சியும் இல்லாததினால்தான் என்றுதான் சொல்லவேண்டும்.

எது எப்படி இருந்தாலும் இராமாயண கதையில் வரும்,

இராமன் தெய்வத்தன்மை உடையவனா? அதாவது மனிதத்தன்மைக்கு மேற்பட்டவனா?

இராமன் போக்கியமானவனா? இராமன் வீரனா?

இராமன் அறிவாளியா? இராமன் சரி உணர்ச்சி இல்லாதபொது மனிதனா?

என்பவை பற்றியும் சீதை பதிவிரதையா?

சராசரி பெண் தன்மையாவது கொண்டவனுக்குத்தகுதியுடைய பெண்ணா? என்பவை பற்றியும் இராவணன் அபேக்ஷியனா?

சீதையை தூக்கிப்போனவன்? சீதையைக் கற்பழித்தவனா?

என்பவை பற்றியும் வால்மீகி கருத்துப்படி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசிய என்று கருதியே இக்கட்டுரை வரையப்படுகிறது.

வைணவத சார்பாக ஏற்படுத்தப்பட்ட பாகவதத்தில் விஷ்ணு அவதாரங்கள் என்ற தலைப்பில் பல அவதாரங்களை உண்டாக்கி கொண்டிருப்பதில் இராமாவதாரம் என்பதாக ஒரு அவதாரத்தைக் கற்பித்துக்கொண்டு அந்த அவதாரம் பூராவுண் என்னும் ஒரு இராட்சதனைக்கொன்றதாகவும் குறிப்பிட்டிருக்கிறது.

அதாவது,
மீன் அவதாரம்
ஆமை அவதாரம்
பன்றி அவதாரம்
சிங்கம் அவதாரம்
குள்ளப் பார்ப்பான் அவதாரம்
பரசுராம அவதாரம்
இராம அவதாரம்
கிருஷ்ண அவதாரம்
பலராம அவதாரம்

இப்படியாக ஒன்பது அவதாரங்களைக் குறிப்பிட்டு இந்த ஒன்பது அவதாரங்களும் பார்ப்பனர்களுக்கு ("தேவர்கள்"க்கு) வீரதமான திராவிட அரசர்களை (இராட்சதர்களை)க் கொல்லவே அவதாரமெடுத்து அந்தப்படி கொன்று வெற்றிபெற்றதாகக் கட்டப்பட்டிருக்கிறது,

இந்தப்படியான 9 அவதாரத்தில் ஒரு அவதாரமான இராம அவதாரம் என்பதை எடுத்துக்கொண்டு பார்ப்பனர்கள் தனியாக ஒருகதை எழுதி அதற்கு இராமாயணம் என்று பெயர் கொடுத்து விட்டார்கள்.

எதுபோலவென்றால் ஈசவத்தில் நபியாண்டான் நம்பி திருக்தொண்டர் பெயரையும் தொகையையும் வைத்துக்கொண்டுபெரிய புராணக் கதைகள் கற்பிக்கப்பட்டவை எப்படியோ அப்படிப் போலவே இராமாயணத்தைச் செய்துவிட்டார்கள்.

ஆனால் பெரிய புராணக்கதை வெறும் பக்திக்கு ஆகவே பக்த லீலாமிருதம் என்னும் வைணவ பக்தர்கள் கதையைப்பற்றி வைஷ்ணவர்கள் கற்பனை செய்து கொண்டார்கள்.

ஆனால் இராமாயணக்கதையை கந்தபுராணத்தைப் பார்த்து அதிலுள்ள பாத்திரங்கள் கருத்துக்களை மாற்றி வைத்து, பெயர்களை மாற்றி "தமிழ் எழுதிய கதை" போல் இராமாயணம் எழுதிக் கொண்டார்கள் என்றாலும், இராமாயணத்தில் சந்தப் புராணத்தைவிட அதிகமாக சரி உணர்ச்சியைவைத்து பிற்கால அறிவுளர்கள் சிந்தித்து ஏற்ற பல நல்ல மாற்றங்களையும் புகுந்து திராவிடர் [தமிழர்] நாகரீகம்/மீது வெறுப்பும் தாழ்வுமனப் கொள்ளும் தன்மை பில் வரைந்து கொண்டார்கள்.

ஆனால் கந்தபுராணத்தைவிட இராமாயணம் மிகவும் வேறு முற்காலமாக இருந்ததால் அது ஒரு காலத்தில் ஒருவரால் மேலே எழுதிமுடிக்கப் பட்டுவிட்டது.

இராமாயணம் பிற்காலத்தில் எழுதப்பட்டதால் அதுவும் பல காலத்தில் பலரால் எழுதி இலட்சியக்கதையும் பங்கப் படுத்திக் கொண்டதலாலும் முன்னுக்குப்பின் முரணாகவும் முன்னுக்குப்பின் சங்கதிகளை மறைத்தும் புனைந்துரைத்தும் காவியமாகவித் தெண்டார்கள்

அதன் பயனாகத்தான் இராமாயணக் கதையின்படி பார்த்தால் முக்கிய பாத்திரங்களாகிய இராமன் சீதை என்கின்ற பாத்திரங்கள் மிகமிகக் கீழ்த்தரமாகவே சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

இராமன் அய்ந்து வயதளவு உள்ள சிறுவனாக இருக்கும் போதே தாடகையைக் கொன்ற தாகவும் அதுவும் மறைந்திருந்து கொன்றதாகவும் 6 வது வயதில் திருமணம் செய்து கொண்ட தாகவும் இராமனின் நடத்தைக் குறை துவங்குகிறது.

இந்த இரு காரியத்திற்கும் இராமனைப் பொறுப்பாளியாக்க இடமில்லை என்றாலும் இராமனுக்கு 18 ஆண்டு ஆன காலத்தில் இராமனுக்கு முடிசூட்ட அவன் தந்தை தீர்த்தகாலத்தில்,

அயோத்தி நாடு கைகேயி உரிய நாடு என்றும் அதை பரதனுக்கு வேண்டிய உரிமை பரதனுக்குத்தான் உண்டு என்றும் தப்பாது மனுமான, தசரதனுக்கும் இராமனுக்கும் தெரிந்திருந்தும் இராமனும் சகியாலோசனை செய்து பரதனையும் கைகேயியையும் ஏமாற்றி இவ்விருவருக்கும் இவர்களது இன மக்களுக்கும் தெரியாமல் சூழ்ச்சி ஏற்பாடு செய்து மகுடாபிஷேக ஏற்பாடு செய்திருக்கின்றான்

இந்த ஏற்பாட்டில் தகப்பனாகிய தசரதன் செய்த சதியையும் சூழ்ச்சியையும்பற்றி நமக்குக் கவலை இல்லை.ஏனெனில்இன்று தசரதனை யாரும் உயர்ந்த தன்மையனாகவோ உதாரணபுருஷனாகவோ சொன்னதில்லை ஆனால் இராமனை உத்தமபுத்திரன் என்றும் உதாரண புருஷனென்றும் சத்திய சீலன் என்றும் வீரபுருஷன் என்றும் கருதுகிறார்கள். ஆகவும் அப்படிப்பட்ட இராமன் இப்படிக் கருதத் தகுதி உள்ளவனாவானா? என்பதை அறிவுடைய கொள்ளுகிறவர்கள் எண்ணிக்க வேண்டியதாகும்.

இந்தப் பிரச்சனைக்கு இதவரை சிந்த ஆச்சாரிய புருஷர்களோ இராம பக்தர்களோ இராம பக்தர்களோ பதில் சொல்லவில்லை,

'சக்கரவர்த்தித் திருமகன்' புத்தகம் எழுதியவர் ஜி கோபாலாச்சாரியார் சமாதானம் சொல்லவில்லை.

ஆகவே இராமனைக்கு மேம்பட்டதும் இராமன் தன்மைக்குமாறு தன்மையதாகவும் இருப்பதும்

[2-ம் பக்கம்]

பாம்பின் நஞ்சும் பார்ப்பனர் உறவும் தப்பாது கொல்

கூண்டுக்குள் சிங்கம்! இன்று 79-ம் நாள் இன்னும் எத்தனைநாளோ?

சிறந்த நூலிலிருந்து சில பகுதிகள்!

(திரட்டியது: தேனி)

"லெனினும் மதமும்"

(ரஷ்யப் புரட்சியின் தந்தை வ. வி. அய். லெனின் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரைத் தொகுதியின் தமிழ் மொழி பெயர்ப்பு)

முன்னுரை

ரஷ்யா சென்று திரும்பி வந்தது தந்தை பெரியார் அவர்களால்மொழிபெயர்க்கப்பட்டது இந்நூல். சுயமரியாதைக்காரர்களின் கொள்கை என்ன? அவர்கள் ஆத்திகர்களா? நாத்திகர்களா? அவர்கள் ஏன் தங்களை நாத்திகர்கள் என்று சொல்லிக் கொள்வதில்லை? அவர்கள் ஏன்நாத்திகப்பிரசாரம் செய்கிறார்கள்? ஆத்திக நாத்திகத்திற்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம்? என்பன போன்ற பொருள்களுக்கு சரியான விளக்கமும் பதிலும் கூறுவது சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் வாதிகள் தேசிய [illegible]ன் மதஇயல்வாதிகள் என்[illegible] கற்பிக்கும் சகலவித பழி சுமத்தல்களுக்கும் [illegible]த்தரமான பதிலையும்கூறும் [illegible]க்கமாகச் சொல்லவேண்டு[illegible]ால் தந்தை பெரியார் அவர் இதைப் பற்றிக் குறிப்பிடும் [illegible]ாழுது ஒவ்வொரு சுயமரி[illegible]ாதைக்காரரும் இதைச்சட்டப் [illegible]த்தகம் போல் கையாள வேண்டியதாகும் என்று எழுதியுள்ளார்கள் இன்று இங்கு லெனின் அவர்கள் ஒழுக்கம் என்பது பற்றிப் பேசிய பகுதியைப் பிரசுரித்துள்ளோம் மேலே படியுங்கள்.

லெனின் பேசியது

(1920-ம் வருடம் அக்டோபர் மாதம் 8-ந் தேதி 3-வது அகில ரஷ்ய கம்சமால் காங்கிரசில் லெனின் பேசிய பேச்சு.) (கம்சமால் என்பது பொது உடமைக் கொள்கையை ஏற்ற இளைஞர்கள்)

எனதன்பான இளந்தோழர்களே!

முதலாவதாக நான் இவ்விடத்தில் பொதுஉடமைக் கட்சியார் ஒழுக்கத்தைப் பற்றிக் கொண்டுள்ள கொள்கையைக் குறிப்பிடுகிறேன்.

காங்கள் யாவரும் பொது உடமைவாதராக பழகிக் கொள்ள [illegible]இளம் கம்யூனிஸ்ட் [illegible]வேலை என்னவென் [illegible]திலும், ஸ்தாபனம் [illegible]பதிலும், தங்கள் [illegible]த உறுதிப்படுத்த [illegible]நடத்துவதில் [illegible]தங்களைத் [illegible]ருதுகிறோம். [illegible]வதற்கு தங் [illegible]தை திடப்படுத்திக்கொள்ள வேண்டியதாகும் இந்த வழியில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆட்களைப் பழக்கி சேர்க்கப்படும். தற்காலத்திய இளைஞர்களைப் பழக்குவதும் அறிவு புகட்டும் படிப்பிப்பதும் ஆகிய வேலைகளை எல்லாம் பொது உடமை ஒழுக்கக்கொள்கள் அவர்களுக்குப் படியும்படியான மார்க்கத்திலேயே செய்து வரவேண்டும்.

ஆனால் பொதுஉடமைஒழுக்கக்கொள்கை என்று தனியாக ஒன்று இருக்கிறதா? என்று கேள்வி பிறக்கலாம். ஒப்புக் கொள்வதில்லை என்பதோடு அப்படிப்பட்ட ஒழுக்கம் எவ்விதத்திலும் எமாற்றமும் மோசடியுமே யாகும் என்றும் இது முதலாளிகள், நிலச்சுவான்தார்கள், ஆகிய பணக்கார வகுப்பினர்களுடைய நன்மைத்தாக தொழிலாளர்கள் குடியாளவர்கள் ஆகியவர்கள் கண்களில் மண்ணைப் போடுவதற்கேற்றதமாகும் என்றும் கூசாமல் சொல்லுவோம்.

வகுப்புப்பேரில் தொழிலாளர்களுடைய நன்மையையே பிரதானமாகக் கருதவந்தோர்களுடைய ஒழுக்கம் என்று நாம் சொல்லுகிறோம் தொழிலாளர் நடத்தும் வகுப்பு யுத்தத்திற்கு ஏற்படும் நன்மைக்கும் அவசியத்திற்கும் தக்கவாறே நமது ஒழுக்கத்தை மாறுபடுத்திக் கொள்ளுகிறோம். பழைய சமூக ஒழுக்கம் என்பது நிலச்சுவான்தாரனும் பணக்காரனும் தொழிலாளர்களையும் குடியானவர்களையும் அழுத்திவைத்து தலைபெடுக்க வொட்டாமல் செய்து வருவதற்கு பயன்பட்டு வந்தது இவ்விதசமூக ஒழுக்கத்தைத்தான் நாம் அழித்தத்தேர்வேண்டியதாயிற்று. மேலும் இந்த மாதிரி நிலச்சுவான்தாரனும் பணக்காரனையும் தான்வீழ்த்தவேண்டியதாயிற்று. இந்த கிலச்சுவான்தார்களையும் பணக்காரர்களையும் வீழ்த்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. ஆனால் இக்காரியத்தைச் செய்து முடிக்கச் சில ஸ்தாபன அமைப்புகள் அவசியமாயிற்று இந்த அமைப்புகளைக்கட்டவுள்ளிடம் சொல்லி சிருஷ்டி செய்து விடமுடியவில்லை (இந்த அமைப்புகளை அமைக்க "கட்டவுளால்" ஏற்பட்ட ஒழுக்கம் என்பது இடம்கொடுக்கவும் மாட்டாது)

இப்படிப்பட்ட ஸ்தாபன அமைப்புகள் ஏற்படுத்தவதற்கு தொழிற்சாலைகளுர் பட்ட பரைகளும் அவசியமாயிற்று. தங்கள் பழைய தூக்கத்தில் இருந்து விழிப்பு எய்தியபதற்கேடைத்தொழிலாளிகளும் அவசியமாயிற்று. இந்த வகுப்பு உற்பத்தி ஆனபிறகே இவைகளெல்லாம் காணப்படும் நிலைமைக்கு வந்தசேர ஒரு பொதுஜன இயக்கம் ஆரம்பமாயிற்று. இதன்மூலம் ஏற்பட்ட புரட்சியின் பயனாய் உலகத்தில் மிகவும் பலஹீனமான ரஷ்ய தேசத்தில் தொழிலாளருக்கு வெற்றி ஏற்பட்ட பிறகு மூலைமுடுக்குகளாக உலகம் முழுவதுமுள்ள பணக்கார வகுப்பினர் யாவரும் ஒன்றாய் திரண்டு தங்களை எதிர்த்தபோதுங்கூட ரஷ்ய தொழிலாளர் எதிர்த்து நின்று வெற்றிபெற முடிந்தது.

நம் கண்முன்னால் உலகம்முழுவதும் தொழிலாளர்களின் புரட்சி எப்படி பரவுகிறதென்பதை இப்போது கண்டுவருகிறோம்.

நமக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்திலிருந்து இப்பொழுதுஒன்று கூறமுடியும் அதாவது ஏற்கனவே ஒற்றுமையின்றியும் கட்டுப்பாடுகள் இன்றியும் இருந்த எல்லாக் குடியானவர்களையும் ஒன்றுபடுத்தி தன்னுடன சேர்த்துக் கொண்டு ஒரு மாத்தான சக்தியை சிருஷ்டித்து அந்த சக்தியின் மூலம் எல்லா கொள்களைக் கூட்டத்தாரின் தாக்குதல்களாவதற்றையும் எதிர்த்துநிற்கமுடிந்தது இது தொழிலாளர் வகுப்பைத் தவிர வேறு எவராலும் சாதித்திருக்கமுடியாதாரியமாகும் இவ் வகுப்பார் மாத்திரம்தான் கஷ்டப்படும் மக்களுக்கு ஒற்றுமையின் சக்தியை அறிவித்தும் தாங்களின்பாவரும் ஒன்று சேரவும் போது உடமைச் சமூகம் தோன்ட புது உலகம் ஒன்றை உண்டாக்கப்பெருக்கிக்கட்டியமுடிக்கவும்கலாவக்துள்ள வர்கள் ஆவார்கள்.

ஆகவே மனித சமூகத்திற்கு அபாயகரமாய் உற்பவிக்கப்பட்ட ஒழுக்கம் என்பதாக ஒன்று இருப்பதை நம்மால் ஒப்புக்கொள்ள முடியாது அப்படிப்பட்ட ஒழுக்கம் ஒன்று இருப்பதாகச் சொல்வதை மோசடியேயாகும் நாம் சம்பந்தப்பட்டவரை ஒழுக்கம்தான் மனித சமூகத்தில் தொழிலாளர்கள் நன்மைபைப்போருந்துவதே பாகும்.

சென்னை மாநில வாவுசெலவுத் திட்டம்

அசெம்பிளி வட்டாரத்தின் பிரதிபலிப்பு

சென்னை மார்ச் 2—

சென்னை சட்டமன்றத்தின் வரவு செலவு விவாதக் கூட்டம் மார்ச 3 ந்தேதி திங்கட்கிழமை முதல் நடைபெறும்

சென்னை மாநில நிதின் வரவு செலவுத் திட்டத்தில் மக்களை ஊக்குவிக்கத் தக்க புதியஅம்சம் எதுவுமில்லையென்ற உறப்பினர்கள் கருதுகின்றனராம்

இந்த வரவுசெலவுத்திட்டத்தினால் பல்கட்டணங்கள் உயரும் என்றும் சினிமா சட்டணங்களும் உயரும் என்றும் இதனால் சாதாரணமக்களின் அதிருப்தியை வரவேற்கும் தேர்தல்கள் நேரிடும் என்றும் கருதுகிறார்களாம்

விவசாய வருமானத்திற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும்விதிவில்லக்கு பற்றி அதிகம் எதிர்ப்பு இருக்காதாம்

என். ஜீ. ஓக்கள் பிரச்னை

வரவு செலவுத் திட்டத்தில் என் ஜீ ஓக்கள் சம்பன உயர்வு அல்லது நிராக்கிப்படி உயர்வு குறித்து எவ்விதக்குறிப்பும் இல்லாதது என் ஜீ ஓ க்களுக்கு பெரும் ஏமாற்றத்தை யளித்திருக்கிறதென்றும் ஆனால் என் ஜீ ஓக்கள் பிள்ளைகள் 10 வது வகுப்புவரை (வேது படிக்கும் வரை) இலவசமாகப் படிக்க சலுகைகளிக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்திருப்பது அவர்களுக்கு ஓரளவுக்கு திருப்தியளிக்கும் என்றுகம்பப் படுகிறது.

ஆனால் ஆசிரியர்கள் சம்பனத்தில் எவ்வித உயர்வும் இருப்பதாக தெரியவில்லை.

வரலாறியின் உள்ளம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கன்தான் என்பதும் நன்றாய் ஆட்சேபனைக்கோ சமாதானத்திற்கோ இடமில்லாத தன்மையில் விளங்குகிறது.

அன்றியும் இராமன் பல பெண்களைக்கொன்றும் மானபங்கம் செய்தும் இருப்பதோடுவாளினால் வீரனை காரணமில்லாமல் கொன்றது மாத்திரமல்லாமல் ஒளிந்து இருந்துஅதுவும் வாலிமற்றொரு வனிடம் போர் செய்துகொண்டிருக்கும்போது மறைந்திருந்து கொன்றது வீரனல்ல என்பதைக் காட்டுவது மாத்திரமல்லாமல் இராமன் ஒரு கோழை என்பதையும் அய்யமறக் காட்டுகிறது.

இராமன் ஒரு அறிவாளியா என்றுபார்த்தால்இராமாயணத்தில் எந்த இடத்திலும் இராமனுக்கு அறிவு இருந்ததாகக்காண முடியவே இல்லை.

இராமனின்தகப்பன் இராமனுக்கு ஒரு குழ்ச்சி அறிவைச்சொல்லிக் கொடுக்கிறான் அதாவது :

"இராமா நான் அறியாத புத்திபால்காட்டைகையிக்குகொடுத்துவிட்டேன் அதனால் உன்னை காட்டுக்குத் போதும்படிசொல்ல வேண்டியதாயிற்று. ஆனால் அந்தப்பிய நான் வாக்குக் கொடுத்ததற்கு நான் தான் கட்டுப்படவேண்டுமே ஒழிய நீ கட்டுப்படவேண்டிய கலலை ஆகலால் நான்சொன்ன போதிலும் நீ காட்டுக்குப் போகவேண்டாம் என்னை ஆட்சியில் இருந்து தள்ளிவிட்டு நீ மாசனம் ஏற்றுக்கொண்டதாகச் சொல்லிவிட்டு நாட்டை ரீஆட்சி செய்" என்று சொல்லுகிறான். அதற்கு இராமன் அப்படியேல்லாம் னைப் பதும் செய்வதும் தவறு என்று சொல்லாமல்"நான்தை பே அப்படிச் செய்தால் மக்கள் உண்மைஅறிந்த பிறகு என்னை எதிர்த்துக்கொள்ளுவார்கள் ஆதலால்,

"நீ இப்போது உனது பதவியை காலிசெய்யாமல் இருந்துகொண்டு நான் இப்போது மகுடாபிஷேக விழா நடத்த வில்லை" என்று அறிவும் நாணயமும் இல்லாதபடி பேசினதனது தூ ஆசை வெளி பாகும்படி நடந்துகொள்ளுகிறான்.

மற்றும் காட்டில் மாயமான் வந்ததை முன் ஆடும்போது அது மான் அல்ல என்று இலட்சுமணன் எவ்வளவு சொல்லியும் கேட்காமலும் பின் விளைவு என்ன ஆகும் என்பது பற்றி சிந்தியாமலும் மாயமானைப் பிடிக்கப் போகிறான்.

இதனால் இராமனுக்கு அறிவு என்பதே சுயமாக் என்பது நன்றாய் விளங்குகிறது.

இதை எடுத்துக்காட்டுவதன் கருத்து என்னவென்றால் இராமணமும் இராமனும் போற்றப்படத் தக்கவையாகுமா? தமிழ்மக்களை பார்ப்பனர் எவ்வளவு தூரம் ஏமாற்றி மடையர்களாக்கி ஆதிக்கம் தெலுத்து இருக்கிறார்கள்? அதுவும் இந்த பகுத்தறிவு விஞ்ஞானகாலத்தில் இப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதை மக்களுக்கு அறிவிக்கவும் மக்கள் இராமாயண பக்தர்களை இதற்கு சமாதானம் கேட்கச்செய்யவுமே யாகும்

இனி சீதை சங்கதியைப் பார்ப்போம்.

ஆற்காடுக்குடியில் சாலை!

ஜப்பானியரின் சாதனை

டோக்கியோ மார்ச் 2—

ஜப்பானியநாட்டின்தலைநகரையும் தெற்கு தீவு பகுதியையும் பிரிக்கும்உள்ள ஆழ்கடலின் அடியில் ஜப்பானிய பொறியியல் வல்லுனர்கள் சுரங்கப்பாதை—சாலை போட்டிருக்கிறார்கள் இந்த சுரங்கப்பாதையின் நீளம் இரண்டே கால் மைல் இதைகட்டிமுடிக்க 21 ஆண்டுகள் ஆயிற்று. இதற்கு 800 கோடி பென் (8 லட்சம் பவுன்) செலவாயிற்றாம்.

கடலுக்கடியில் போடப்பட்டுள்ள இரண்டே சுரங்கப் பாதைகளில் இது ஒன்று.

சிறை மாற்றம்

சென்னை மார்ச் 2...

திருச்சி சிறையில் 'பி' கிளாஸ் கைதியாய் இருந்த நீடாமங்கலம் வி.ராஜகோபால் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். வேறு எவரும் சிறை மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. திடீரம் தெரிந்தது வெளியிடப்படும

மேலிசட்ட மன்றத்தில் வரவுசெலவுத் திட்டம்

சென்னை மார்ச் 2—

சென்னைமாகிலத்தின் 1958 59ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் மேற்ற மேல் சட்டமன்றத்தில் தொழில் அமைச்சர் திரு வெங்கட்ராமனால் அளிக்கப்பட்டது

வருமானத்தில் அபிவிருத்தி காணப்பட்டிருப்பதற்குக்காரணம் விற்கமிஷன் அளித்துள்ள மானியம்தான் என்றார்.

பாவலர்மீது வழக்கு

மார்ச் 12ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

திருச்சி மார்ச் 2—

திரான்விடர் கழகப் பிரசாரகர் திருபாவலர் பாலசுக்ரமஅவர்கள் மீது திருச்சி போலீசாரால் தொடுக்கப்பட்ட கிரிமினல்வழக்கு 2வது வகுப்பு மாஜிட்ரேட் கோர்ட்டில் 28—2—58 தேதியிட்டிருந்த சரண்டர் 12—3—58ந்தேதி மாற்றப்பட்டிருந்த இறது செக்ஷன் 504 323 325 117 அப் பி சி பி மீது அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது

ரயில்கட்டணச்சலுகை

25 வயதுக்குமேற்பட்ட மாணவர்க்கு இல்லை

புதுடில்லி, மார்ச 1...

உள்ளூர் வெளியூர் ரயில்களில் கட்டணச் சலுகைப் பெறுகிற மாணவர்கள் விஷயத்தில் இனி 25ம் வயது வரம்பை ஏற்படுத்த ரயில்வேபோர்டு தீர்மானித்திருக்கிறது.

1958 மே 1ந் தேதியிலிருந்து அத்தகைய கட்டணச்சலுகைகள் 25 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மேட்டுமே வழங்கப்படும்